செய்தி வெளியீடு எண்: 446 நாள் - 28/08/2014

<u>பத்திரிகை செய்தி வெளியீடு</u>

## சென்னை வணிக வரிக் கோட்டங்களின் மறுசீரமைப்பு மற்றும் புதிய வணிக வரி விதிப்பு வட்டங்கள் உருவாக்கம்

பொதுமக்களுக்கு நலன் பயக்கும் வகையிலும், சிறந்த நிர்வாகம் கருதியும் சென்னையிலுள்ள வணிகவரி கோட்டங்கள், சரகங்கள் மற்றும் வரிவிதிப்பு வட்டங்கள் அனைத்தையும் மறுசீரமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள். அதன்படி, சென்னை மண்டல வணிக வரிக் கோட்டங்களில் தற்போது இயங்கி வரும் 89 வரிவிதிப்பு வட்டங்கள் மறுசீரமைக்கப்பட்டு 100 வரிவிதிப்பு வட்டங்களாக உருவாக்கப்பட்டுள்ளன. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள வரிவிதிப்பு வட்டங்கள் 01.09.2014 முதல் இயங்கும்.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள வரிவிதிப்பு வட்டங்கள் மற்றும் ஏற்கனவே இயங்கி வரும் வரிவிதிப்பு வட்ட அலுவலகங்களின் முகவரிகள் துறையின் வலைதளம் www.tnvat.gov.in-ல் வெளியிடப்பட்டுள்ளது.

வணிக வரி கோட்டத்தின் மறுசீரமைப்பின்படி புதிதாக உருவாக்கப்பட்டுள்ள வரிவிதிப்பு வட்டங்கள் குறித்த சந்தேகங்கள் மற்றும் விளக்கங்களுக்கு, தொலைபேசி எண் 044-28290960/ 044-28290962-ஐ தொடர்பு கொள்ளலாம். அல்லது மின்னஞ்சல் vatfeedback@nic.in மூலமாகவும் அறிந்து கொள்ளலாம்.

28/8/14

முதன்மை செயலர் /
வணிக வரி ஆணையர்

(க. ராஜாராமன் இ.ஆ.ப.)

வெளியீடு:-
இயக்குநர் செய்தி மக்கள் தொடர்புத் துறை
சென்னை-9.